| | | | |  |
|---|---|---|---|---|
| Headline | 2465 Effected by hiv | | | |
| MediaTitle | Tamil Nesan | | | |
| Date | 13 Dec 2011 | Color | Black/white | |
| Section | News | Circulation | 45,000 | |
| Page No | 19 | Readership | 124,000 | |
| Language | Tamil | ArticleSize | 126 cm² | |
| Journalist | N/A | AdValue | RM 244 | |
| Frequency | Daily | PR Value | RM 733 | |

# எச்.ஐ.வி. - புதிதாக 2,465 பேர் பாதிப்பு

**சண்டகான், டிச.13-** நாட்டில் மேலும் 2, 465 பேர் புதிதாக எச்.ஐ.வி. தாக்கத்திற்கு ஆளாகியுள்ளனர். இதில் 1,958 பேர் ஆண்கள் என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

சுகாதார துணை அமைச்சர் டத்தோ ரோஸ்னா அப்துல் ரஷிட் இந்த தகவலை வெளியிட்டார். எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் நோய் தாக்கத்திற்கு ஆளாக எச்.ஐ.வி. தொற்றுக் கிருமிகள் பரவிய ஊசி பரிமாற்றமே மூலகாரணமாக விளங்குகிறது. மேலும் எச்.ஐ.வி. தொற்றியவர்களுடனான உடலுறவு, எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானோ ருக்கு பிறக்கும் குழந்தை களுக்கும் இந்த பாதிப்பு ஏற்பட மூலகாரண மாக அமைகிறது என்றார் அவர்.

கடந்த 1986 ஆம் ஆண்டு தொடங்கி இவ்வாண்டு செப்டம்பர் மாதம் வரையில் நாட்டில் மொத்தம் 93,827 பேர் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டுள்னர் என்ற தகவலையும் அவர் கூறினார். சண்டகானில் நேற்று அனுசரிக் கப்பட்ட உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்ட சிறப்பு நிகழ்வில் ஆற்றிய சிறப்புரையில் ரோஸ்னா இந்த விவரங்களை கூறி னார். அவரது உரையை சுகாதார அமைச்சின் துணை தலைமை இயக்குநர் டாக்டர் லோக்மான் ஹகிம் வாசித்தார்.

எச்.ஐ.வி.க்கு எதிரான, சுகாதார அமைச்சின் பல்வேறு பரவலான திட்டங்கள் மற்றும் நடவடிக்கை களின் வழி சமீபகாலத்தில் அதன் தாக்கம் நாட்டில் சற்று குறைந்தி ருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. நாட்டில் புதிதாக எச்.ஐ.வி. தாக்கத் திற்கு ஆளாவோரின் எண்ணிக்கை கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் கறையத் தொடங்கியது. 6,756 ஆக அவ்வாண்டிலிருந்த அந்த எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு மொத்தம் 3,652 பேர் புதிதாக எச்.ஐ.வி. தாக்கத்திற் குள்ளாகினர். ஒவ்வொரு ஒரு லட்சம் பேருக்கு 12.6 விழுக்காடு என்ற நிலையில் இந்த எச்.ஐ.வி. தாக்கம் உள்ளதாகவும் அவர் கூறினார். 2015 ஆம் ஆண்டுக்குள் இதனை ஒரு லட்சத்திற்கு 11 பேர் என்ற நிலையளவில் குறைக்க அரசாங்கம் இலக்கு கொண்டி ருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

Powered by: MediaBanc
Be informed